பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 14 திங்கட்கிழமை 29.12.2025 | அதிர்வு 152

## அத்தியாவசிய சேவைகளாக பல்வேறு சேவைகள் பிரகடனம்

### ஜனாதிபதி அநுர அதிரடி



மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள் உள்ளிட்ட பல் வேறு சேவைகளை 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# டினோஜாவுக்கு நீதி கோரி முல்லைத்தீவில் போராட்டம்

### வைத்தியசாலையை முற்றுகையிட்ட பெருந்திரளான மக்கள்

(முல்லைத்தீவு நிருபர்கள்)

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சையின் போது உயிரிழந்த சிறுமி டினோஜாவுக்கு நீதி கோரி இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு - சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த குகநேசன் டினோஜா எனும் 12 வயது சிறுமி அண்மையில் 05



# அன்று ஊடகங்களை எரித்தவர்கள் இன்று சுதந்திரம் பற்றி பேசுகின்றனர்



### இப்படி அநுர அரசு பதிலடி

அன்று ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தி அவற்றைக் கொளுத்தியவர்கள், இன்று ஊடக சுதந்திரம் பற்றி கதைப்பது “சாத்தான் வேதம் ஓதுவது போல் உள்ளது” என்று பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசு ஊடக அடக்குமுறையைக் கையாள்வதாக எதிரணிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இது தொடர்பில் ஊடகங்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “கடந்த காலங்களில் ஊடக அடக்குமுறை கையாளப்பட்டது. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர். 04




# யாழ். ஊடக அமையத்தின் ஆண்டு விழாவில் ஊடகவியலாளர்கள் விருது வழங்கிக் கௌரவிப்பு









(எஸ்.நிதர்சன், பிரபாகரன் டிலக்சன்)

யாழ். ஊடக அமையத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், ஊடகவியலாளர் கௌரவிப்பு நிகழ்வும் யாழ். கோண்டாவிலில் அமைந்துள்ள இராஜேஸ்வரி மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட முன்னாள் பீடாதிபதியும் சிரேஷ்ட வைத்திய நிபுணருமான பேராசிரியர் சு.ரவிராஜ், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம், முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி சி.சிவரூபன், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர் விருத்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தலைமையுரையை யாழ். ஊடக அமையத்தின் போசகர் இரட்ணம் தயாபரன் ஆற்றினார்.

தொடர்ச்சி▼

# யாழ். ஊடக அமையத்தின் ஆண்டு விழாவில் ஊடகவியலாளர்கள் விருது வழங்கிக் கௌரவிப்பு














**தொடர்ச்சி▲**

அதன்பின்னர் 'ஊடக அறிக்கையிடலின் சமகால போக்கு'எனும் தலைப்பில் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானமும், 'புதிய ஊடக கொள்கைகள்' எனும் தலைப்பில் போராசியர் எஸ்.ரகுராமும், "ஊடகத்துறை எதிர்நோக்கும் சட்டரீதியான சாவால்" எனும் தலைப்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணனும், 'சட்ட வைத்திய துறைசார் ஊடக அறிக்கையிடல்' எனும் தலைப்பில் வைத்திய அதிகாரி சி.சிவரூபனும் உரையாற்றினர்.

பிரதம உரையை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட முன்னாள் பீடாதிபதியும் சிரேஷ்ட வைத்திய நிபுணருமான பேராசிரியர் சு.ரவிராஜ் நிகழ்த்தினார்.

மேலும் நிகழ்வில், ஊடகத்துறைக்குப் பணியாற்றியவர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மயில்வாகனம் நிமலராஜன் ஞாபகார்த்த விருதை ஊடகவியலாளர் ஐயன் கிருஷ்ணனும், மாமனிதர் தராகி சிவராம் ஞாபகார்த்த விருதை அமரர் இராஜநாயகம் பாரதியும் பெற்றுக்கொண்டனர்.

நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசன் ஞாபகார்த்த விருதை சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவசுப்பிரமணியம் சிவபாலனும், நாட்டுப்பற்றாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி ஞாபகார்த்த விருதை நியூஸ் பெஸ்டின் வவுனியா மாவட்ட செய்தியாளர் நவரட்ணம் கபில்நாத்தும் பெற்றுக்கொண்டனர்.

யாழ். ஊடக அமையத்தின் சிறப்பு விருது மூன்று தசாப்த காலமாக ஊடகத்துறையில் பணியாற்றி வருபவரும், யாழ். ஊடக அமையத்தின் தலைவருமான சிரேஷ்ட ஊடகவியலாளர் குமாரசாமி செல்வக்குமாருக்கு வழங்கப்பட்டது.



# ஹொரணையில் தீ விபத்து!

(க.மகாதேவன்)

ஹொரணை வவுலகல பிரதேசத்திலுள்ள இறப்பர் சார்ந்த உற்பத்தி தொழிற்சாலை ஒன்றில் இன்று காலை தீ பரவியுள்ளது.

ஹொரணை தீயணைப்புப் பிரிவினர், பிரதேச மக்கள் மற்றும் தொழிற்சாலை ஊழியர்கள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

தீ பரவலுக்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை.

# இந்திய ஏவுகணைப் பாகம் திருமலைக் கடற்பரப்பில்!

இந்தியக் கொடியுடன் காணப்படும் ஏவுகணையின் பாகம் எனச் சந்தேகிப்படும் பொருள் ஒன்று நேற்று திருகோணமலை கடற்பரப்பில் காணப்பட்டது.

இதனை மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவர் தனது கையடக்கத் தொலைபேசியில் படமாக்கினர்.

இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.







## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**அன்று ஊடகங்களை...**

ஊடக நிறுவனங்கள் கொளுத்தப்பட்டன.

இவ்வாறான செயலில் ஈடுபட்டவர்கள் இன்று ஊடக சுதந்திரம் பற்றி கதைப்பது நகைப்புக்குரிய விடயமாகும்.

எமது ஆட்சியில் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும். ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்குரிய உரிமைகள் நிச்சயம் பாதுக்காக்கப்படும்.

ஊடக நிறுவனங்கள் உண்மையை எழுத வேண்டும். அவ்வாறு எழுதினால் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை.” – என்றார்.

**அத்தியாவசிய...**

அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள், எரிபொருள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள், எரிவாயு விநியோகம் அல்லது பகிர்ந்தளிப்பு உள்ளிட்ட பல்வேறு சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் விதிகளுக்கமைய, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, மருத்துவமனைகள், பராமரிப்பு நிலையங்கள், மருந்தகங்கள் மற்றும் இதுபோன்ற நிறுவனங்களில் நோயாளர்களைப் பராமரித்தல், அனுமதித்தல், பாதுகாத்தல், உணவளித்தல் மற்றும் சிகிச்சையளித்தல் தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அம்புலன்ஸ் சேவைகள், பயணிகள் அல்லது பொருட்கள் போக்குவரத்துக்கான பொதுப் போக்குவரத்து சேவைகள், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புடன் தொடர்புடைய சேவைகள், உணவு மற்றும் அத்தியாவசியப்பொருட்களை வழங்குதல், பாதுகாத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான சேவைகள், அனைத்து மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் களமட்ட அதிகாரிகளால் ஆற்றப்பட வேண்டிய அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கி உட்பட அனைத்து அரச வங்கிகள் மற்றும் காப்புறுதி சேவைகள், உள்ளூராட்சி நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் நீர் வழங்கல், மின்சாரம், கழிவுநீர் அகற்றும் முறைமை, தீயணைப்பு, கழிவு சுத்திகரிப்பு மற்றும் குப்பை அகற்றுதல் உள்ளிட்ட அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

# மன்னார் நீதிமன்றத்தின் முன் துப்பாக்கிச்சூடு: பிரதான சந்தேகநபர் உட்பட இருவர் சிக்கினர்!



(மன்னார் நிருபர்)

மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உள்ளடங்களாக இரண்டு சந்தேகநபர்களைப் பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக இவ்வருடம் ஜனவரி மாதம் 16 ஆம் திகதியன்று இரண்டு நபர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.


அதன்படிஇ கிடைத்த தகவலின் அடிப்படையில், மன்னார் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவும், மன்னார் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவும் இணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டன.

இதன்போது, மன்னார் – தலை மன்னார் பிரதான வீதியில உள்ள ஒரு விடுதியில் ஒரு கைக்குண்டுடன் மறைந்திருந்த மேற்படி குற்றத்தைத் திட்டமிட்ட பிரதான சந்தேகநபரும், அவருக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த ஒரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் 22 மற்றும் 38 வயதுடைய உயிலங்குளத்தில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் மன்னார் மாவட்ட மக்கள் மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சிலாபம் ரயில் பாதையில் இன்று சேவைகள் ஆரம்பம்

(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

டித்வா சூறாவளியால் சிலாபம் ரயில் பாதையில் ஏற்பட்ட சேதம் சரி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இன்று முதல் சிலாபத்திலிருந்து ரயில் சேவை இடம்பெறும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் கொழும்பு சிலாபம் ரயில் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல காலங்களாக கொழும்புக்கு அலுவலகப் பணியாளர்கள் கூடுதலாக ரயிலில் பயணிப்பதுண்டு.அண்மையில் ஏற்பட்ட டித்வா சூறாவளி காரணமாக இவர்கள் பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்தனர்.

இதனை கருத்தில் கொண்ட அரசு ஓரளவு ரயில் பாதையை சீர் செய்து வழமைக்கு கொண்டு வந்துள்ளனர்.

இதற்காக பயணிகள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் புத்தளம்வரைக்கும் மிக விரைவில் இந்த வேலைத் திட்டத்தைச் செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**டினோஜாவுக்கு...**

சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்திருந்தார்.

அந்தச் சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி இன்று முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை நுழைவாயிலை முற்றுகையிட்டு பெருந்திரளான மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வைத்தியசாலைப் பணிப்



பாளரை குறித்த இடத்துக்கு வரவழைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள்சிறுமியின்மரணம் தொடர்பில் கேள்வி எழுப்பியமையுடன், டினோஜாவின் மரணத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

தொடர்ந்து சிறுமியின் சந்தேகத்துக்கிடமான மரணத்துக்கு நீதியைப் பெற்றுத் தருமாறும் இதன்போது மக்களால் மகஜர்களும் கைளிக்கப்பட்டன.

அதேநேரம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இதுவா முறைமை மாற்றம்?

அரச நிர்வாக முறைமைகளை முழுமையாக மாற்றி நேர்சீரானவையாக நடைமுறைப்படுத்துவோம், பொறுப்புக் கூறலை முழு அளவில் நடைமுறைப்படுத்துவோம் என்றெல்லாம் மக்களுக்கு வாக்குறுதி அளித்து, அதனை ஆணையாகப் பெற்று, அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அந்த விடயங்களில் கோட்டை விட்டு விட்டுத் தவறான வழிக்குச் சென்று கொண்டிருக்கின்றது என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அரசு நியமனங்களில் ஆளும் தரப்பு மேற்கொள்ளும் சொதப்பல் நடவடிக்கைகள் அதன் நேர்மைத் தன்மையைக் கேள்விக்கு உள்ளாக்கி இருக்கின்றன என்பதுதான் உண்மை.

தேர்தல் மூலம் மக்கள் தங்களுக்கு அளித்த ஆணை, தாங்கள் நம்பும் - விரும்பும் - நியமனங்கள் மூலம் தங்கள் கொள்கைகளை நடைமுறைப்படுத்த மக்கள் வழங்கிய அதிகாரம் என்று அரசுத் தலைமையும் ஆட்சியாளர்களும் கருதுகிறார்கள் எனத் தெரிகிறது. அது ஓரளவில் சரியெனினும், ஜனநாயக நிர்வாகத்தில் சுயாதீன நிறுவனங்களின் தனித்துவங்களின் மீது ஆளும் தரப்பு அதீத தலையீடு செய்வதற்கான அதிகாரத்தை - ஆணையை - இந்தத் தேர்தல் வெற்றி வழங்கவில்லை என்பதை அதிகாரத் தரப்பு புரிந்து கொள்ளத் தவறுவதாகவே தோன்றுகின்றது.

உண்மையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கடப்பாடு இந்த அரச நிறுவனங்களின் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் பாதுகாப்பதிலும், நியாயமான சட்டங்களை நிறுவுவதிலும், வாக்குறுதி அளிக்கப்பட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதிலும்தான் தங்கி இருக்கின்றது.

'முறைமை மாற்றம்' என்று கூறி அதிகாரத்துக்கு வந்தவர்கள் மக்களின் ஆணையை வைத்துக் கொண்டு தாங்கள் விரும்புவதை செய்வதுதான் முறைமை மாற்றம் என்று கருதுவது வேடிக்கையிலும் வேடிக்கை.

முறைமை மாற்றத்தின் கீழும் பொறுப்புக் கூறல் நடவடிக்கையின் கீழும் மிக முக்கியமான அரச நிர்வாகத்துறை கணக்காய்வாளர் நாயகம் திணைக்களமாகும். அது சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் வெளி அழுத்தங்களுக்கு அப்பாற்பட்டும் உறுதியாகச் செயற்பட்டால் மாத்திரமே தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற முடியும்.

ஆனால் கணக்காய்வாளர் நாயகத்தின் நியமன விடயத்தில் அரசத்தலைமை காட்டும் அல்லது வெளிப்படுத்தும் தான்தோன்றித்தனமான அணுகுமுறை அதன் நேர்மைத் தன்மையைக் கேள்விக்கு உட்படுத்தி இருக்கின்றது என்பது அப்பட்டமான உண்மையாகும்.

ஜனநாயகத்தின் முக்கியமான காவல் நாய் கணக்காய்வாளர் நாயகம் பதவியாகும் சுயாதீனமாக, சுதந்திரமாக, வெளி அழுத்தங்களுக்கு கிஞ்சித்தும் இடம் கொடுக்காமல், நீதி, நியாயமான முறையில் பணியை ஆற்றக் கூடியவர்களே அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும். அதுவே அந்த பதவியின் பாரம்பரியமாக இந்த நாட்டில் நீண்டு நிலைத்து வந்திருக்கின்றது.

அதை தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு லாயக்கற்ற முறையில் அரசு தலைமை செயல்படுவது, அது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவு செய்யும் என்ற நம்பிக்கையைத் தரவில்லை.





### ஆபிரிக்காவில் இன்னோர் புதிய தேசம்:

# இஸ்ரேல் அங்கீகரிக்கும் சோமாலிலாந்து!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா.**

நீண்ட காலமாக சுதந்திர நாடாக வேண்டி கோரிக்கை விடுத்த சோமாலிலாந்துக்கு இஸ்ரேல் முதன் முதலாக அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் பின்னணியில் அமெரிக்கா, இஸ்ரேலின் இராணுவ புவியியல் மூலோபாய புதிய வியூகம் இருப்பதாக கூறப்படுகிறது.

**இஸ்ரேலின் முதல் அங்கீகாரம்**

சோமாலிலாந்தை இன்னும் எந்த நாடுகளும் அங்கீகரிக்காத நிலையில் இஸ்ரேல் முதல் முறையாக அதனை செய்துள்ளது. இதற்கு சோமாலியா, எத்தியோப்பியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. சர்ச்சைக்கு உரிய வகையில் முதல் நாடாக அங்கீகரித்த இஸ்ரேல் அரசின் முடிவை பல அரபு நாடுகள் கடுமையாக எதிர்த்தன.

ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள முக்கியமான நாடுகளில் ஒன்று சோமாலியா. இந்த நாட்டின் ஒரு பகுதியில் இந்திய பெருங்கடல் உள்ளது. இன்னொரு புறம் செங்கடல் உள்ளது. இந்த இரு கடல்களும் கப்பல் போக்குவரத்துக்கு முக்கியமான ஒன்றாகும்.

இந்த நிலையில்தான் சோமாலியாவின் ஒரு பகுதியாக இருந்த சோமாலிலாந்து தனி நாடு கோரியது. சோமாலிலாந்து ஏடன் வளைகுடாவில் அமைந்துள்ளது. இதனால் அது முக்கியமான பகுதியாகும். இதனால் சோமாலியா, சோமாலிலாந்தை தனி நாடாக்க விரும்பவில்லை. இதனால் சோமாலியாவில் இருந்து பிரிந்த சோமாலிலாந்து தனி பிரதேசமாக செயல்பட்டு வருகிறது. 1991 இல் சோமாலியாவிலிருந்து பிரிந்து தன்னாட்சியுடன் சோமாலிலாந்து செயல்பட்டு வருகிறது. சோமாலிலாந்து மக்கள் தங்களை தனி நாடாக அறிவித்து கொண்டனர்.

இந்த நிலையில் கிட்டத்தட்ட அறுபது லட்சம் மக்கள் வசித்து வரும் சோமாலிலாந்து என்ற நாட்டை அங்கீகரிப்பதாக 34 ஆண்டுகளுக்கு பிறகு இஸ்ரேல் முதல் நாடாக அறிவித்துள்ளது.

**புதிய வியூகத்தில் இஸ்ரேல்**

உலக நாடுகளை திரும்பி பார்க்க வைத்துள்ள இஸ்ரேலின் இந்த அங்கீகாரத்துக்குப் பின்னணியில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் பெரிய தந்திரமான வியூகம் இருப்பதாகவும் பார்க்கப்படுகிறது. அதாவது பாலஸ்தீனத்தில் இருந்து வெளியேறும் மக்களை சோமாலிலாந்தில் குடியமர்த்த திட்டமிடப்பட்டு இருப்பதாகவும், பின்னர் காசாவை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அமெரிக்கா திட்டமிட்டு இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில் சோமாலிலாந்து தனி நாடு இல்லை என்றும் அவை தங்கள் நாட்டின் ஒரு பகுதி என்றும் சோமாலியா தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, சோமாலிலாந்து பகுதியை அங்கீகரிக்கும் இஸ்ரேலின் செயலை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஆபிரிக்க யூனியன் நாடுகளும், அரபு நாடுகளும் தெரிவித்துள்ளன.

**சோமாலிலாந்தின் சர்வதேச உறவு**

சோமாலிலாந்துடன் பிரிட்டன், துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம், டென்மார்க், தைவான் உள்ளிட்ட நாடுகள் தூதரகம் ரீதியிலான உறவை பேணி வந்தாலும் கூட தனி நாடாக அங்கீகரிக்கவில்லை. இந்த நிலையில்தான் சோமாலிலாந்தை முதல் நாடாக இஸ்ரேல் அங்கீகரித்துள்ளது. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இதற்கான அறிவிப்பை நேற்று வெளியிட்டார்.

சோமாலிலாந் சுதந்திர நாட்டின் கல்வி, சுகாதாரம், விவசாய துறை மேம்பாட்டுக்கு உதவுவதாகவும் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் சோமாலிலாந்து அதிபர் அப்திர் ரஹ்மான் முகமது அப்துல்லாஹியிடம் பேசியிருந்தார்.

இதையடுத்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, வெளியுறவுத்துறை அமைச்சர் கிடியான் ஸார் மற்றும் சோமாலிலாந்து அதிபர் அப்துர் ரஹ்மான் முகமது அப்துல்லாஹி ஆகியோர் பரஸ்பர அங்கீகார ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த நடவடிக்கை ஆபிரகாம் ஒப்பந்தத்துக்கு இணங்குவதாகவும், இதுபற்றி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்புடன் இதை விவாதிப்பதாகவும் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஆபிரகாம் ஒப்பந்தம் என்பது யூதம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் என மூன்று மதங்களிலும் முக்கிய தீர்க்கதரிசியாக கருதப்படும் ஆபிரகாம் பெயரில் உள்ள உடன்படிக்கையாகும்.

இது கடந்த 2020 ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர்

தொடர்ச்சி▼

# ஆபிரிக்காவில் இன்னோர் புதிய தேசம்:
# இஸ்ரேல் அங்கீகரிக்கும் சோமாலிலாந்து!

**தொடர்ச்சி▲**

டொனால்ட் டிரம்ப் மத்தியஸ்தம் செய்ய இஸ்ரேல், ஐக்கிய அமீரகம், பஹ்ரைன் இடையேயான அமைதியை நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் வழியாக இஸ்ரேல் இஸ்லாமிய நாடுகளுடன் உறவை சுமூகமாக்கும் வகையில் உருவாக்கப்பட்டது. இந்த நிலையில்தான் ஆபிரகாம் ஒப்பந்தம் அடிப்படையில் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அறிவித்துள்ளார்.




இஸ்ரேல் அங்கீகார பின்னணி

சோமாலிலாந்து குடியரசை இஸ்ரேல் அங்கீகரித்த செய்தியை பல அரபு நாடுகளும் தங்களது எதிர்ப்பை தெரிவித்து உள்ளன. இஸ்ரேல் ஏன் இதைச் செய்கிறது என்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

சோமாலியா இரண்டு மாநிலங்களின் ஒன்றியத்தால் ஆனது. ஒன்று முன்னர் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இருந்த சோமாலிலாந்து மாநிலம். இது வடக்கில் உள்ளது மற்றும் முதன்மையாக இசாக் குலத்தினர் வசிக்கின்றனர். இரண்டாவது முன்னர் இத்தாலிய கட்டுப்பாட்டில் இருந்த சோமாலிலாந்து பிரதேசம் ஆகும்.

ஆரம்பத்தில் சோமாலி குடியரசை உருவாக்க இரண்டு மாநிலங்களும் ஜுலை 1, 1960 இல் ஒரு ஒன்றியத்தில் நுழைந்தன. ஆனால் இறுதியில் இந்த ஒன்றியம் தோல்வியடைந்தது.

இசாக் இனச் சமூகத்தினர் வடக்கில் பெரும்பான்மையாக இருந்தனர். ஆனால் ஒன்றியத்துக்குப் பிறகு, அவர்கள் சிறுபான்மையினராக மாறினர். தெற்கில் உள்ள மொகடிஷுவில் உள்ள மத்திய அரசு அவர்களை ஒடுக்கியதாகவும், 1981 இல், ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்ல சுதந்திரப் போரை அறிவித்ததாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

இதன் விளைவாக 1991 இல் அவர்கள் வடக்கின் முழு கட்டுப்பாட்டையும் எடுத்து சோமாலிலாந்து குடியரசின் சுதந்திரத்தை அறிவித்தனர். தற்போது இஸ்ரேல் அவர்களை அங்கீகரிக்கும் வரை, உலகில் எந்த நாடும் சோமாலிலாந்து குடியரசை அங்கீகரிக்கவில்லை.

சோமாலிலாந்து குடியரசு நிலையானது, செயற்படும் ஜனநாயகம் மற்றும் ஒப்பீட்டளவில் வளமானது என்பது உண்மைதான். இதற்கு நேர்மாறாக சோமாலியா பெரும்பாலும் தோல்வியுற்ற நாடாக உள்ளது. இஸ்லாமிய ஜிஹாதிஸ்ட் குழுவான அல் ஷபாபின் கட்டுப்பாட்டில் பெரிய பகுதிகள் உள்ளன.

இந்த நிலையில் இந்த இரு நாடுகளின் தற்போதைய நிலைமையில் இருந்து பல வேறுபாடான விஷயங்களை கற்றுக் கொள்ளலாம். இரண்டு தேசிய இனங்கள் ஒன்றிணைந்த பிறகு பிரிவது எளிதானது அல்ல. பெரும்பாலான நாடுகள் இதை அடைய அழிவுகரமான போரை நடத்துகின்றன. ஆனால் வரலாற்றில் சிங்கப்பூரும் மலேசியாவும் இரத்தமின்றி இதை அடைந்தன.

இரண்டாவதாக, சட்டப்பூர்வ அங்கீகாரம் செயற்படும் அரசுக்கு வழிவகுக்காது. இதற்கு நேர்மாறாக, ஒரு அரசு அங்கீகரிக்கப்படாததால், அது செயல்பட முடியாது என்று அர்த்தமல்ல. இதனால்தான் சிங்கப்பூர் பாலஸ்தீனத்துக்குச் செயற்படும் அரசு இருக்கும்போது மட்டுமே நாங்கள் அதை அங்கீகரிப்போம் என்று கூறியுள்ளது.

இஸ்ரேல் சோமாலிலாந்து குடியரசை அங்கீகரிப்பதில் பல முக்கிய காரணங்கள் இருக்கின்றன.

சோமாலிலாந்து குடியரசு ஏடன் வளைகுடாவின் கடற்கரையில் அமைந்துள்ளது. மறுபுறம் ஏமன் நாடும் உள்ளது. குறிப்பாக, ஹவுத்திகள் ஏமனை கட்டுப்படுத்தி வருகிறார்கள். இஸ்ரேலுடன் முரண்படும் ஈரானிய சார்பானவர்களே ஹவுத்திகள் ஆவார்கள். செங்கடல் ஊடாக கப்பல் போக்குவரத்தின் முக்கிய புள்ளியான ஏடன் வளைகுடாவையும் அவர்கள் தடுத்தனர்.

ஆனால் அவர்களுடன் முரண்படும் சோமாலிலாந்தை இஸ்ரேலிய அரசு அங்கீகரித்துள்ளமை, ஹவுத்திகளை ஏமனில் ஒரு வழிக்கு கொண்டுவரவே இந்த அங்கீகார முயற்சி என்று கூறப்படுகிறது.

இது ஆப்பிரிக்காவின் கொம்பு பிராந்தியம் மற்றும் செங்கடல் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பைக் குலைக்கும் என எச்சரிக்கை செய்துள்ளன.

இந்த சோமாலிலாந்து செங்கடல் – ஏடன் வளைகுடா பகுதியில் அமைந்துள்ளது. சர்வதேச அளவில் கப்பல் போக்குவரத்துக்கு இந்த வழித்தடம் மிகவும் முக்கியமானதாக உள்ளது. குறிப்பாக ஏமனின் ஹவுதிகள் இஸ்ரேல் கப்பல்களை செங்கடலில்தான் தாக்குகின்றனர். இப்படியான சூழலில் சோமாலிலாந்தை கைக்குள் வைத்துக் கொண்டால் அங்கிருந்து இராணுவ தாக்குதல்களை எளிதாக நடத்தலாம். அதேபோல ஏமனின் ஹவுதிகளுக்கும் உரிய பதிலடி கொடுக்க முடியும் என்று நெதன்யாகு கணக்கு




போட்டுள்ளார்.

இந்த விஷயத்தில் தற்போது அமெரிக்கா விலகியே உள்ளது. சோமாலியாவுடன், அமெரிக்காவுக்கு தற்போது மோதல் போக்கு உள்ளது. அதேவேளையில் இஸ்ரேலுடன் நல்ல நட்பு உள்ளது. மேலும் செங்கடல் பகுதியில் அமெரிக்காவின் வர்த்தக கப்பல்களுக்கு ஏமன் ஹவுதிகளால் அச்சுறுத்தல் உள்ளது. இருப்பினும் கூட சோமாலியாவில் இருந்து பிரிந்து செயல்பட்டு வரும் சோமாலிலாந்தை இஸ்ரேல் அங்கீகரித்ததை டிரம்ப் ஏற்கவில்லை. சோமாலிலாந்து உட்பட சோமாலியாவின் பிராந்திய ஒருமைப்பாட்டை தாங்கள் விரும்புவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# நீரில் மூழ்கி இருவர் மாயம்!



(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

வென்னப்புவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நைனாமடம் பாலத்தில் இருந்து யுவதி ஒருவர் கிங் ஓயாவுக்குள் குதித்து நீரில் மூழ்கி மாயமாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. வென்னப்புவ பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காணாமல் போன யுவதி போருதோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த யுவதி, தான் காதலித்த இளைஞனைத் தொலைபேசி ஊடாக அந்த இடத்துக்கு வருமாறு அழைத்துள்ளார். அந்த இளைஞன் தனது நண்பர் ஒருவருடன் நைனாமடம் பாலத்துக்கு அருகில் வந்தபோது, யுவதி ஆற்றில் குதித்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

யுவதியைக் காப்பாற்றுவதற்காக அந்த இளைஞனும் ஆற்றில் குதித்துள்ளார். எனினும், அங்கிருந்தவர்கள் இளைஞனைப் பத்திரமாக மீட்டபோதிலும், யுவதி நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்று மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தாளையடி கடற்கரையில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவரும் நீரில் மூழ்கி மாயமாகியுள்ளார். மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தகவலுக்கமைய இது குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆழியவளை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# அக்கரைப்பற்றில் நூல் வெளியீட்டு விழா!

(றிபாஸ்)

பிரதிக் கல்விப் பணிப்பாளர் பஸ்மில் ஏ கபூர் எழுதிய "மக்கு என்ற அபி" நூல் வெளியீட்டு விழா அக்கரைப்பற்று அஸ் ஸிறாஜ் மகா வித்தியாலய அதாஉல்லா ஆர்ட் கலரியில் நடைபெற்றது.

முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ.அஹமட் கியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நூலின் அறிமுக உரையை தென். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம். அப்துல் றஸாக் நிகழ்த்தியதுடன், நூல் பற்றிய விமர்சன உரையை சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ்வும், ஏற்புரை, நன்றியுரையை நூலாசிரியர் பஸ்மில் ஏ கபூர் ஆகியோரும் நிகழ்தினர்.

விழாவில் பிரதி, உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டு நூலாசிரியரிடமிருந்து நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.






# பதவிக்கு பிரச்சினைகள், சவால்கள் வராமல் தன்னைப் பாதுகாக்கும் அக்கரைப்பற்று வலயம்!

## பிரதேச சபை உறுப்பினர் அன்ஸில் தெரிவிப்பு

(அபு அலா)

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனைக்கு கீழுள்ள ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் தொடர்பான தகவல்களைக் கோரி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக கடந்த 2025.10.30 ஆம் திகதி விண்ணப்பித்தும் அதற்கான பதில் எதுவும் வழங்கப்படவில்லை. இருப்பினும் இரண்டு தடவைகள் நினைவூட்டல் கடிதங்களை கடந்த 2025.11.18 ஆம் திகதியும், 2025.12.08 ஆம் திகதியும் அனுப்பியும், அதற்குக்கூட விண்ணப்பம் கிடைத்துவிட்டது அல்லது கிடைக்கவில்லை என்பதான ஒரு குறிப்பைத் தானும் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனை இதுவரை அனுப்பவில்லை.

இவ்வாறு அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் ஊடகங்களுக்கு இன்று (29) கருத்துத் தெரிவிக்கையில்,

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்கு உட்பட்ட மூன்று கோட்டங்களும், துரதிஷ்டவசமாக மூன்று வலயங்கள் போன்று வெவ்வேறாகவே செயற்பட்டு வருகின்றன. அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களே குற்றஞ்சாட்டுகின்ற நிலைமை



காணப்படுகிறது.

அட்டாளைச்சேனை கோட்டதுக்கு உட்பட்ட சுமார் 300 மாணவர்கள் கல்வி கற்கும் ஒரு பாடசாலையில் பத்துக்கும் குறைவான ஆசிரியர்களே கடமையாற்றுகின்ற நிலையில், அக்கரைப்பற்று கோட்டத்துக்கு உட்பட்ட 65 இக்கும் குறைந்த மாணவர்கள் கல்வி கற்கின்ற ஒரு பாடசாலையில் 13 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். ஆனால், நகர்ப்புற பாடசாலைகளில் இருக்கும் எந்த ஒரு வளமும் கரையோர மற்றும் எல்லைப்புற பாடசாலைகளில் இருப்பதில்லை.

ஆசிரியர் பற்றாக்குறையுள்ள பாடசாலைகளில் இருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டால், வேறு ஒரு பாடசாலையில் தேவையில்லை என்று விரட்டிவிடப்பட்ட ஒருவரைக் கொண்டு இடம் நிரப்புவதைத் தவிர, வலயக் கல்விப் பணிப்பாளரோ கோட்டக் கல்விப் பணிப்பாளரோ வேறு எதையும் இவ்வாறான பாடசாலைகளுக்கு செய்து கொடுக்க முன்வருவதில்லை.

சகல மாணவர்களுக்கும் சமத்துவமான கல்வி வழங்குவதை இவர்கள் ஒருபோதும் உறுதிப்படுத்துவதுமில்லை. மாறாக, தமது உத்தியோகங்களுக்குப் பிரச்சினைகள், சவால்கள் வராமல் தங்களது காலங்களை கடத்திக்கொண்டு செல்வது எவ்வாறு என்பது தொடர்பிலேயே அவர்களது முழுமையான கவனமும் இருக்கின்றது. இவ்வாறான பாரபட்சங்களுக்கு எதிராக பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் விழித்துக் கொள்ளாதவரை எந்தவொரு மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

மக்களின் வரிப்பணத்தில் அரசால் வழங்கப்படும் சகல வளங்களும் சகலருக்கும் சமத்துவமாக சென்றடைவதை உறுதிப்படுத்த இவ்வாறான பாரபட்சங்களுக்கு எதிராக எழுந்து நிற்க வேண்டிய கடமை எம் எல்லோருக்கும் உள்ளது.- என்றார்.

# அட்டாளைச்சேனை அமைப்பாளர் பதவியிலிருந்து உதுமாலெப்பை எம்.பியை விலக்கத் தீர்மானம்!

(அபு அலா)

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை வகிக்கும் - முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் பதவியை மீளப் பெற்று, அந்தப் பதவியை பொருத்தமான ஒருவருக்கு வழங்க வேண்டும். இந்தக் கோரிக்கை கட்சியின் தலைவரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும்.

இவ்வாறு கட்சியின் அட்டாளைச்சேனை மத்திய குழு தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எஸ்.எம்.கபூர் முன்னிலையில் மத்திய குழுத் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. தற்போதைய மத்திய குழுவின் தலைவர் ஏ.எஸ்.எம். ஹலீம் தலைமையில் தொடர்ச்சியாக இயங்கும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த பிரதேச சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்களுக்கு பாராட்டு விழாவொன்றை நடத்துவதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளராக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை பதவி வகிக்கின்றார். அவர் கட்சியின் தேசிய பிரதி அமைப்பாளராகவும் பதவி வகிக்கின்ற நிலையில், அட்டாளைச்சேனை அமைப்பாளர் பதவியை அவரிடமிருந்து பெற்று, அட்டாளைச்சேனையிலுள்ள கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவருக்கு அந்தப் பதவியை வழங்க வேண்டும் எனவும், இதன் போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி தீர்மானங்களை கட்சித் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதெனவும் இதன்போது முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸ், பிரதேச சபை உறுப்பினர்களான அஸ்வர் சாலி, ஏ.சி. நியாஸ், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஏ.பி.ஏ. காதர், கட்சின் உயர்பீட உறுப்பினரும் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளருமான யூ.எம்.வாஹிட், மத்திய குழு செயலாளரும் அதிபருமான ஏ.சி.எம்.ஹாரித் உள்ளிட்ட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஈழத்து மெல்லிசை மன்னருக்கு சென்னையில் நடந்த பாராட்டு!







**(பா.சதீசன்)**

"ஈழத்து மெல்லிசை மன்னர்" என போற்றப்படும் மூத்த இசையமைப்பாளர் எம்.பி. பரமேஸ், தனது தந்தை தமிழறிஞர் பீதாம்பரத்தின் வாழ்க்கை வரலாற்றை புத்தகமாக மறுபதிப்பு செய்துள்ளார்.

அவரது இந்த ஆக்கத்துக்காகவும், அவரது 60 வருட இசைப் பயணத்துக் காகவும் அவரது மகளும் இசைவாரிசும் மற்றும் இலங்கையின் முதல் தமிழ் பெண் இசையமைப்பாளர் எனும் பெருமை யுடையவருமான பிரபாலினி பிரபாகரனால் ஒழுங்குசெய்யப்பட்ட பாராட்டு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை சென்னையில் நடைபெற்றது.

தென்னிந்திய திரைப்பட மக்கள் தொடர்பாளர் குமரேசனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த விழா 3 தலைமுறைகள் ஒன்று கூடிய ஒரு நிகழ்வாக அமைந்தது.

இந்த விழாவில், இந்திய மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா மற்றும் திரைப்பட இயக்குநர் சீனு ராமசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில், இந்திய மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா கருத்து தெரிவிக்கையில்,

நம் தொப்புள்கொடி உறவான ஈழத்து மண்ணிலிருந்து வந்து, இசை உலகையே தன் பக்கம் ஈர்த்த ஒரு மாமனிதரான எம்.பி. பரமேஷ் ஜேர்மனி, சுவிட்சர்லாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்த நாடுகளிலும் தமிழின் பெருமையையும், மெல்லிசையின் இனிமையையும் கட்டிக்காத்தவர்.

அவரது வரிகளும், குரல் வளமும் அவரது மெட்டுகளும் தொடாத இதயங்கள் இல்லை. இன்று அவரது குடும்பம் இங்கே ஒன்றுகூடியிருப்பதைப் பார்க்கும்போது நெகிழ்ச்சியாக இருக்கிறது.

அவர், 60 வருடகாலம் கலையுலகில், அதுவும் இசைத்துறையில் நிலைத்து நிற்பது என்பது சாதாரணமான விடயம் அல்ல. அது ஒரு தவம்.

எம்.பி. பரமேஷ் இன்னும் நூறாண்டுகள் கடந்து தனது இசைச் சேவையைத் தொடர வேண்டும்.

அவரின் இசை வாரிசான மகள் பிரபாலினியின் பேச்சையும், பாடலையும் பாராட்டிய அவர், தொடர்ந்து கொடிமலர் படத்தில், எம்.எஸ்.வி. இசையில் பி. சீனிவாஸ் பாடிய "மவுனமே பார்வையாய்.." என்ற பாடலை பாடினார்.

நிகழ்வில் கலந்துகொண்ட இயக்குநர் சீனு ராமசாமி கருத்து தெரிவிக்கையில்,

'ஈழத்து மெல்லிசை மன்னர்' எம்.பி.பரமேஷின் இசைப் பயணம் ஒரு மண்ணின் இசை வரலாறு. பொதுவாக ஒரு கலைஞன் தன் வாழ்நாளில் ஒரு பத்தாண்டுகள் புகழுடன் இருப்பதே பெரிய விஷயம். ஆனால், தொடர்ந்து அறுபது ஆண்டுகள் இசையோடு பயணிப்பது என்பது சாதாரணமானதல்ல.

இன்றைய நவீன காலத்தில் இசை எவ்வளவு மாறினாலும், மெல்லிசையையும் ராகங்களையும் அடிப்படையாகக் கொண்ட இசை எப்போதும் அழிவதில்லை. அந்த இசையைக் கட்டிக்காக்கும் ஒரு தூணாகப் பரமேஷ் ஐயா விளங்குகிறார்.

இந்த முப்பெரும் விழாவை இவ்வளவு நேர்த்தியாக ஏற்பாடு செய்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், குறிப்பாகப் பிரபாலினி பிரபாகரனுக்கும் எனது பாராட்டுகள் எனத் தெரிவித்தார்.

இதன்போது இலங்கையின் மெல்லிசை மன்னர் எம்.பி. பரமேஷ் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையின் ஒரு சிறிய கிராமத்தில், இசையின் மீது கொண்ட காதலால் எனது பயணத்தைத் தொடங்கினேன். காலச் சூழலால் புலம்பெயர்ந்து ஜேர்மனி, சுவிட்சர்லாந்து எனப் பல நாடுகளுக்குச் சென்றாலும், என் தமிழ் இசையை நான் ஒருபோதும் கைவிடவில்லை.

பல்வேறு பிரமுகர்கள் முன்னிலையில் எனது அறுபது ஆண்டுச் சேவையைக் கௌரவிப்பது எனக்குப் பெரும் நெகிழ்ச்சியைத் தருகிறது.

இந்த முப்பெரும் விழா நடப்பதற்குக் காரணமான எனது குடும்பத்தினருக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈழத்து மெல்லிசை மன்னர் எம்.பி. பரமேஷின் மகளும் இசையமைப்பாளருமான பிரபாலினி பிரபாகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த மேடையில் இன்று எனது தந்தை அமர்ந்திருப்பதைப் பார்க்கும்போது மகளாக எனக்குப் பெருமையாகவும், மிகுந்த நெகிழ்ச்சியாகவும் இருக்கிறது. ஒரு மனிதன் தனது வாழ்நாள் முழுவதையும் இசைக்காகவே அர்ப்பணிப்பது என்பது எவ்வளவு பெரிய விஷயம் என்பதை நான் அருகில் இருந்து பார்த்திருக்கிறேன்.

அவர் எப்போதுமே தன்னைத் தற்காலத்துக்கு ஏற்ப புதுப்பித்துக் கொண்டே இருப்பார். அதனால்தான், இன்று இந்தப் பொற்காலத்திலும் நவீன பாடல்களை அவரால் உருவாக்க முடிந்தது.

அப்பாவை எப்போதுமே ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கும் அவரது நண்பர்கள், உறவினர்கள் மற்றும் இந்த விழாவை இவ்வளவு சிறப்பாக ஒருங்கிணைக்க உதவிய அனைவருக்கும் எனது நன்றிகள்.- என்றார்.

# புதுக்குளம் – மூணாமடு வீதியில் மேம்பாலம் அமைப்பதற்கு நடவடிக்கை முன்னெடுப்பு!







வவுனியாவின் புதுக்குளம் – மூணாமடு வீதியில் மேம்பாலம் அமைத்தல் மற்றும் உக்குளாங்குளம் முனியப்பர் கோவில் வீதிக்கான வடிகாலமைப்பு மேற்கொள்ளல் ஆகியவற்றுக்கு நிதியொதுக்கீடு மேற்கொள்ளுமாறு கடந்த 09 ஆம் திகதி இடம்பெற்ற வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் தவிசாளர் பா.பாலேந்திரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் குறித்த கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் கருத்து தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற பேரிடரின் போது கூட குறித்த புதுக்குளம் – மூணாமடு வீதியில் வெள்ள நீர் கனிசமான அளவு உயரத்துக்குப் பாய்ந்திருந்தது. இதனால் அந்தப் பகுதி மக்கள் கடும் இன்னல்களை எதிர்கொண்டிருந்தனர். குறித்த வீதியால் மழை நேரங்களில் பயணிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. ஆகவே குறித்த வீதியில் மழை நேரங்களிலும் பயணிக்க ஏதுவான அடிப்படையில் மேம்பாலம் ஒன்றைக் குறித்த இடத்தில் அமைக்க அரசு நிதியொதுக்கீடு செய்யவேண்டுமென கேட்டுக்கொண்டார்.

அத்துடன் உக்குளாங்குளம் முனியப்பர் கோவில் வீதியில் உரிய வடிகாலமைப்பு இன்மையால் மழை நேரங்களில் நீர்வெளியேறும் பிரச்சினை காணப்படுவதால் உடனடியாக வடிகாலமைப்பு கட்டுமானம் செய்ய வேண்டும். அதற்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து பதிலளித்த மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் குறித்த இரு விடயங்களுக்குமான மதிப்பீட்டைச் செய்து சமர்ப்பிக்குமாறும், அதற்குரிய நிதியை ஒதுக்கீடு செய்து தருவார் என்றும் தெரிவித்தனர். இதுகுறித்து எழுத்துமூலமான கோரிக்கையும் அரசா அதிபரினால் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதன்பிரகாரம், தற்போது குறித்த இரு வேலைத்திட்டங்களுக்குமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் மாவட்ட செயலகத்துக்கும் அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம் எனும் தொனிப்பொருளில் இரத்ததானம்

(யூ.கே. காலித்தீன்)

சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் சுனாமி இடம்பெற்று 21 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மையோன் சமுக சேவை அமைப்பு, மையோன் குரூப், மற்றும் யுனைடெட் பவர் கவுஸ் ஆகியவற்றின் அனுசரணையில் மாபெரும் இரத்ததான முகாம் ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

"ஓர் உயிரை வாழவைத்தவர் எல்லா உயிர்களையும் வாழவைத்தவர் போல் ஆவார்" எனும் இறைகொள்கைக்கு ஏற்வகையில் உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற நிகழ்வானது அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்தியர், தாதிமார்கள் மற்றும் ஊழியர்கள் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் ஆர்வத்துடன் இரத்தானம் வழங்குவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.









# கொத்மலை நியங்கந்தரா பாரம்பரியம் அழிந்தது; தொடர்ந்து அங்கு வாழ முடியாது - பொதுமக்கள்!

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

கொத்மலையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நியங்கந்தரா ராஜமகா விஹாரை மற்றும் அதைச் சுற்றியுள்ள பல கிராமங்கள் நிலச்சரிவு மற்றும் நீரில் மூழ்கும் அபாயத்தில் உள்ளன. இதற்கு அரசு உடனடித் தீர்வுகளை வழங்க வேண்டும் என்று உள்ளூர்வாசிகள் மற்றும் மகா சங்கத்தினர் அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளனர்.

நிலத்தடி தொல்பொருள் பாரம்பரியம் சமீபத்திய சூறாவளி டித்வாவால் செயல்படுத்தப்பட்ட நியங்கந்தரா ராஜமகா விஹாரையில் உள்ள வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியாக வரலாற்றுச் சிறப்புமிக்க பத்தினியம்மா ஆலயம் முற்றிலும் நீரில் மூழ்கி அழிக்கப்பட்டுள்ளது. கொத்மலை கிராமத்தின் பெருமையான இந்த பண்டைய இடத்தை மீட்டெடுக்க இதுவரை எந்த முறையான திட்டமும் செயற்படுத்தப்படவில்லை என்று பிரதேசவாசிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள பல வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. அங்கு தொடர்ந்து வாழ்வது தங்கள் உயிருக்கு ஆபத்து என்று குடியிருப்பாளர்கள் கூறுகின்றனர். நிரந்தரமாக வாழ ஒரு பாதுகாப்பான இடம் அல்லது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்குமாறு அவர்கள் அரசை வலியுறுத்துகின்றனர்.



இது குறித்துப் பேசிய கொத்மலை துணைத் தலைமை நீதித்துறை சங்க நாயக்கரும் நியங்கந்தர ராஜமகா விகாரையின் தலைமை விகாராதிபதியுமான ஸ்ரீலங்காநந்த தேரர், இந்த நிலைமை இந்த கிராமத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை என்று வலியுறுத்தினார்.

நியங்கந்தர விகாரை கொத்மலையின் வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல். இன்று, இந்தப் பகுதி பாரிய அளவில் நிலச்சரிவு ஏற்படும் அபாயத்தில் உள்ளது. இந்தப் பகுதி தொடர்ந்து மூழ்கினால், மேல் கொத்மலை நீர்மின் நிலையம் மற்றும் கீழே அமைந்துள்ள கீழ் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கும் இது கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தும். இது ஒரு தேசிய பேரழிவின் முன்னோடியாகும். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கோயிலின் பொறுப்பாளரும் பிரதேசவாசிகளும் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாகத் தலையிட்டு நிலச்சரிவு அபாயத்தைக் கட்டுப்படுத்தவும், இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், அழிக்கப்பட்ட தொல்பொருள் இடங்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேலும் கேட்டுள்ளனர்.





# காரைதீவு மனித அபிவிருத்தி தாபன ஊழியர்கள் மலையகத்தில் உதவி!

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையில் ஏற்பட்ட டித்வா சூறா வளியால் கண்டி மாவட்டத்தில் பாதிக்கப் பட்ட மக்களுக்காக அம்பாறை மாவட்டத் திலிருந்து மனிதாபிமான உதவிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இந்த மனிதாபிமான நிவாரணப் பணியானது அம்பாறை மாவட்ட மனித அபிவிருத்தி தாபனத்தில் ஆரம்ப காலம் தொடக்கம் பணியாற்றியவர்கள் மற்றும் வேள்வி பெண்கள் அபிவிருத்தி ஒன்றி யத்தின் முக்கியஸ்தர்களின் ஏற்பாட்டில். அவர்களதும், உள்நாட்டிலும், மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளிலுள்ள இளைஞர்கள், சமூக நலன்விரும்பிகள், நண்பர்கள், கிராம மட்ட வலையமைப்பு கள், பயனாளிகள், பொது மக்கள், முன் பள்ளி ஆசிரியைகள், பெண் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகியோரதும் ஒன்றிணைந்த பங்களிப்புடன் நடை பெற்றது.

இந்த மனிதாபிமான நிவாரண செயற்பாட்டின் ஊடாக 400 பெண்கள், மாணவிகளுக்கான அத்தியாவசிய ஆடைகள், சுகாதாரப் பொருள்கள், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் பொதியிடப்பட்டு மனித அபிவிருத்தி தாபன தலைமை அலு வலகத்தின் ஊடாக கண்டி மாவட்டத் தில் பாதிக்கப்பட்டு முகாம்களிலுள்ளவர் களுக்கு வழங்குவதற்கான அப்பொருள் கள் கடந்த வாரம் கண்டிக்கு கொண்டு செல்லப்பட்டன.

இடைத்தங்கல் முகாம் அமைந்துள்ள இடங்களுக்கு செல்லும் பாதைகள் மண்சரிவு அபாய பிரதேசமாக இருந்ததால் எமது பணிக்குழு எல்லா பகுதிகளுக்கு செல்வது சாத்தியமற்று இருந்து.

அதனால் அம்பாறை மாவட்ட மனி தாபிமான பணிக்குழுவும், மனித அபி விருத்தி தாபன தலைமை காரியாலய உத்தியோகத்தர்களும் ஒன்றிணைந்து அலகுகளாக பிரிக்கப்பட்டு முதலாவதாக கண்டியிலிருந்து சுமார் 28 கிலோ மீற் றர் உயர்ந்த மலைப் பிரதேசமான தெல் தோட்டை பிரதேச செயலக பிரிவிலுள்ள அப்பகலக எனும் பெருந்தோட்டத்தை அண்டிய இடைத்தங்கல் முகாமிலுள்ள 48 குடும்பங்களை சோர்ந்த 150 இற்கும் மேற்பட்டவர்களுக்கும் இவ் நிவாரண உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த் மக்கள் குடியிருந்த வீடுகள் மண்சரிவு ஏற்பட்டு வீடுகள் சேதமடைந்து முற்றாக தடைசெய்யப்பட்ட பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய நிவாரணப் பொருள்களை கண்டி மனித அபிவிருத்தி ஸ்தாபன தலைமை அலுவலகத்தின் ஊடாக தேவை யுடைய முகாம்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மனித அபிவிருத்தி தாபன அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எம்.ஐ.றியாழ் தெரிவித்தார்.







# ஆந்திராவில் ரயிலில் தீ விபத்து; 2 ரயில் பெட்டிகள் எரிந்து சேதம்

ஆந்திர மாநிலம் அனகாபல்லி மாவட்டத்தில் இன்று அதிகாலை டாடாநகர் - எர்ணாகுளம் அதிவிரைவு பயணிகள் ரயிலில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் அந்த ரயிலின் இரண்டு பேட்டிகள் தீயில் எரிந்து சேதமடைந்தன. ஒருவர் உயிரிழந்துள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

அனகாபல்லி மாவட்டத்தில் உள்ள எலமஞ்சிலி ரயில் நிலையம் அருகே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வண்டி எண் 18189 இன் பி-1 மற்றும் எம்-2 ஆகிய இரண்டு பெட்டிகளில் தீ பரவியது. இதனால் அந்த பெட்டிகள் பெருத்த சேதமடைந்தன.

இதை ரயில்வே அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இதில் ஒருவர் தீயில் கருகி உயிரிழந்துள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

அதிகாலை 1.11 மணி அளவில் டாடாநகர் - எர்ணாகுளம் சந்திப்பு அதிவிரைவு பயணிகள் ரயிலில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அதை கவனித்த அதிகாரிகள் தீயணைப்பு துறையினருக்கு தகவல் அளித்துள்ளனர்.

இதையடுத்து உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்பு படையின் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ரயில் ஓட்டுநர் துரிதமாக செயல்பட்டு ரயிலை நிறுத்திய காரணத்தால், பயணிகள் ரயிலில் இருந்து வெளியேறியதாக தகவல் கிடைத்துள்ளது. தீ பற்றிய இரண்டு ரயில் பெட்டிகளில் ஒன்றில் 82 பயணிகளும், மற்றொன்றில் 76 பயணிகளும் இருந்தனர் என தகவல்.

தீ பற்றிய இரண்டு பெட்டிகளும் டாடாநகர் - எர்ணாகுளம் சந்திப்பு அதிவிரைவு பயணிகள் ரயிலில் இருந்து பிரிக்கப்பட்டுள்ளது.

மூத்த ரயில்வே அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர். இந்த தீ விபத்துக்கான காரணம் மற்றும் உயிர் சேதம் குறித்து ரயில்வே துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

# மகாராஷ்டிரா மாநகராட்சி தேர்தல்: சரத் பவார் - அஜித் பவார் கூட்டணி

மகாராஷ்டிராவின் பிம்ப்ரி-சின்ச்வட் மாநகராட்சித் தேர்தலில் அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சி, சரத் பவார் தலைமையிலான என்சிபி கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ளது. இதன்மூலம் பவார் குடும்பம் மீண்டும் இணைந்துள்ளது.

பிம்ப்ரி-சின்ச்வட்டில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அஜித் பவார்,

“இரு கட்சிகளும் இணைந்ததால் குடும்பம் ஒன்றுபட்டுவிட்டது. மாநகராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலை இறுதி செய்யும் போது, இரு கட்சியினரும் ஒன்றாகப் போட்டியிட முடிவு செய்தனர், இது குடும்பத்தை மீண்டும் ஒன்றிணைத்துள்ளது.

இதன் விளைவு குறித்து பல கேள்விகள் எழுந்துள்ளன, ஆனால் சில சமயங்களில் மகாராஷ்டிராவின் வளர்ச்சிக்காக முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். நான் உள்ளூர் தலைவர்களுடன் இடப் பங்கீடு குறித்தும் விவாதித்துள்ளேன், அது விரைவில் அறிவிக்கப்படும்," என்று அவர் கூறினார்.





மேலும், 'கடிகாரம்' மற்றும் 'துத்தாரி' சின்னங்கள் ஒன்றுபட்டுவிட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிம்ப்ரி-சின்ச்வட் மற்றும் புனே மாநகராட்சிகள் உட்பட மகாராஷ்டிரா முழுவதும் உள்ள 29 மாநகராட்சிகளுக்கான தேர்தல்கள் ஜனவரி 15 ஆம் திகதி நடைபெறும், வாக்கு எண்ணிக்கை மறுநாள் நடைபெறும். வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசி தேதி டிசம்பர் 30 ஆகும்.

இதற்கிடையில், புனே மாநகராட்சித் தேர்தலிலும் கூட்டணி அமைப்பது குறித்து இரு கட்சியினருக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.நீண்டஆலோசனைகளுக்குப் பிறகு, அஜித் பவார் தலைமையிலான என்சிபியுடனான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததை தொடர்ந்து, சரத் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சி, புனே தேர்தலில் மகா விகாஸ் அகாதியுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க முடிவு செய்துள்ளது.



# ரஷ்யா - உக்ரைன் போரை நிறுத்துவதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் முன்னெப்போதையும் விட நெருக்கமாக உள்ளதாகவும், ஆனால் இரு நாடுகளின் தலைவர்களுடனான புதிய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இப்பிரச்சினையில் வெளிப்படையான எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தான் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற முதல் நாளிலேயே ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவேன் என உறுதியளித்த ட்ரம்ப், பதவியேற்று ஒரு வருடங்கள் ஆகிறது. ஆனாலும், இப்போரை நிறுத்த ட்ரம்ப் எடுத்த நடவடிக்கைகள் எதுவும் இதுவரை பெரிதாக கைகொடுக்கவில்லை.

இந்த சூழலில், அதிபர் ட்ரம்ப் நேற்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை புளோரிடாவில் சந்தித்துப் பேசினார். ஜெலன்ஸ்கியை சந்திப்பதற்கு முன்பு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனும் ட்ரம்ப் தொலைபேசியில் பேசினார். அப்போது ரஷ்யா அமைதி விஷயத்தில் தீவிரமாக இருப்பதாக புடின் வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பை தொடர்ந்து ஜெலன்ஸ்கியுடன் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப்,

"நாங்கள் இரு தரப்பினருடனும் முன்பை விட மிக நெருக்கமாக இருக்கிறோம் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன். எல்லோரும் போரை முடிவுக்குக் கொண்டுவர விரும்புகிறார்கள். ஆனால் இரு நாடுகளின் தலைவர்களுடனான புதிய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இப்பிரச்சினையில் வெளிப்படையான எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

நாங்கள் பேச்சுவார்த்தையின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன், என்ன நடக்கிறது என்று பார்ப்போம். இல்லையென்றால், இது நீண்ட காலத்திற்கு நீடிக்கும். இந்த செயல்முறைக்கு எனக்கு எந்த காலக்கெடுவும் இல்லை. போரை முடிவுக்குக் கொண்டுவருவது சாத்தியமா என்பது சில வாரங்களுக்குள் தெளிவாகிவிடும்" என்று கூறினார்.

இந்தச் சந்திப்பிற்கு முன்னதாக, உக்ரைனுடனான மோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க, கிழக்கு டான்பாஸ் பிராந்தியத்தில் இருந்து தனது படைகளைத் திரும்பப் பெறுமாறு ரஷ்யா உக்ரைனை வலியுறுத்தியது.

டான்பாஸிலிருந்து உடனடியாக வெளியேறுவதற்கான துணிச்சலான முடிவை உக்ரைன் இப்போது எடுக்க வேண்டும் என்று ரஷ்ய ராஜதந்திர ஆலோசகர் யூரி உஷாகோவ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். டான்பாஸில் உள்ள கிழக்கு டொனெட்ஸ்க் பிராந்தியத்தின் ஐந்தில் ஒரு பகுதி இன்னும் உக்ரைனின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கிருந்து உக்ரைன் வெளியேறவேண்டும் என்பது ரஷ்யாவின் முக்கிய கோரிக்கையாகும்.

புடின் மற்றும் ட்ரம்ப் ஆகியோருக்கு இடையேயான தொலைபேசி அழைப்பு குறித்து பேசிய உஷாகோவ்,

"தற்காலிக போர்நிறுத்தத்திற்கான உக்ரைன் மற்றும் ஐரோப்பிய முன்மொழிவு மோதலை நீட்டித்து, மீண்டும் மோதலை தொடங்கவே வழிவகுக்கும். சண்டையை தற்காலிகமாக நிறுத்துவது என்பது உக்ரைன் மீண்டும் ஆயுதம் ஏந்த வாய்ப்பாக அமையும். தற்காலிக தீர்வுக்கு பதிலாக, மோதலின் மூல பிரச்சினைகளை தீர்க்கும் ஒரு இறுதித் தீர்வையே ரஷ்யா விரும்புகிறது." என்றார்







# பிரித்தானியாவில் இந்த ஆண்டில் 300 க்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள்

பிரித்தானியாவில் 2025 ஆம் ஆண்டில் மட்டும் 300 க்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன என பிரித்தானியாவில் புவியியல் ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது.

அதன்படி, சராசரியாக நாளொன்றில் ஒரு நிலநடுக்கம் என்ற விகிதத்தில் இந்த அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் 20 ஆம் திகதி ஸ்காட்லாந்தின் லோச் லியோன் பகுதியில் சில மணிநேர இடைவெளியில் 3.7 மற்றும் 3.6 மெக்னிடியூட் என இரண்டு நிலநடுக்கங்கள் பதிவாகின. இதுவே அந்த நாட்டில் இந்த ஆண்டின் மிகப்பெரிய நிலநடுக்கங்களாகும்.

டிசம்பர் மாத தொடக்கத்தில் லங்காஷயரில் 3.3 மெக்னிடியூட் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சில்வர் டேல் பகுதியில் 2.5 மெக்னிடியூட் அளவில் பின் அதிர்வுகள் உணரப்பட்டன.

ஸ்கொட்லாந்தின் ஹைலேண்ட்ஸ், தெற்கு வேல்ஸ், யோர்க்ஷயர் மற்றும் லங்காஷயர் ஆகிய பகுதிகள் அதிக நில அதிர்வு செயல்பாடுகளைக் கொண்ட பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.




# 7 நைஜீரியர்கள் டில்லியில் கைது

டில்லியில் விசா காலம் முடிந்த பின்னரும் தங்கியிருந்த 7 நைஜீரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டில்லியின் துவாரகா பகுதியில் விசா இல்லாமல் வெளிநாட்டினர் சிலர் தங்கியிருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

கடந்த 24 ஆம் திகதி அங்கு பொலிஸார் சோதனை நடத்திய போது, நைஜீரியாவைச் சேர்ந்த 7 பேர் விசா காலம் முடிந்த பின்னரும் தங்கி இருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து, அவர்களை வெளிநாட்டினர் மண்டல பதிவு அலுவலகத்தில் ஆஜர்படுத்தி உள்ளனர். அவர்களை நாடு கடத்துமாறு பதிவு அலுவலக அதிகாரி உத்தரவிட்டார்.

இதையடுத்து, நாடுகடத்தும் நடைமுறைகளை முடிக்கும் வரையில் அவர்கள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.


கனடா முரசு

திங்கட்கிழமை 29/12/2025

## அமெரிக்க சுகாதார தகவல்களில் கனடா தங்கியிருக்க முடியாது



02




# 50 ஆண்டுகளுக்குப் பின்னர் கனடாவை உறையவைக்கும் குளிர்

கனடா 50 ஆண்டுகளுக்குப் பின்னர் உறையவைக்கும் கடும் குளிரால் பாதிக் கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போது வட அமெரிக்க கண்டம் இருவேறு தீவிர வானிலை நிலைகளை எதிர்கொண்டு வருகிறது.

ஒருபுறம் கனடா உறையவைக்கும் கடும் குளிரிலும், மறுபுறம் அமெரிக் காவின் பல பகுதிகள் வசந்த காலத்தைப் போன்ற வெப்பத்திலும் காணப்படு கின்றன.

02











# அமெரிக்க சுகாதார தகவல்களில் கனடா தங்கியிருக்க முடியாது

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

அமெரிக்காவை சுகாதாரம் மற்றும் அறிவியல் தகவல்களுக்கான நம்பகமான ஆதாரமாக கனடா நீண்ட காலமாக பார்த்து வந்த நிலையில், இனி அந்த நிலை இல்லை என கனடா மத்திய சுகாதார அமைச்சர் மார்ஜரி மிஷேல் தெரிவித்துள்ளார்.

நம்பகமான கூட்டாளியாக அமெரிக்காவை இனியும் முழுமையாக நம்ப முடியாது எனக் கூறியுள்ளார். சில விடயங்களில் அமெரிக்கா நம்பகமாக இருக்கலாம் என்றாலும், தடுப்பூசிகள் தொடர்பில் கனடா தனித்த பாதையில் செல்ல வேண்டிய கட்டாயம் இருப்பதாகவும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த ஒரு ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம், சுகாதார நிறுவனங்களில் பல முக்கிய மாற்றங்களை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்க சுகாதார மற்றும் மனித சேவைகள் துறையின் செயலராக நியமிக்கப்பட்டுள்ள ரொபர்ட் எப். கெனடி ஜூனியர், தடுப்பூசிகளுக்கு எதிரான கருத்துக்களுக்காக அறியப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரது காலத்தில், அமெரிக்க நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் (CDC) இணையதளம், தடுப்பூசிகள் ஆட்டிசத்தை ஏற்படுத்தாது என்ற நிலைபெற்ற அறிவியல் உண்மைக்கு முரணான தகவல்களை வெளியிட்டது.

இதன் காரணமாக, தடுப்பூசி பாதுகாப்பு குறித்த CDC வெளியிடும் தகவல்களின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகியுள்ளது என முன்னாள் அதிகாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

மேலும், கெனடி தேர்ந்தெடுத்த ஆலோசனைக் குழு, புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கு வழக்கமாக வழங்கப்படும் ஹெபடைட்டிஸ் பி தடுப்பூசியை நிறுத்த பரிந்துரைத்துள்ளதுடன், குழந்தைகளுக்கான முழு தடுப்பூசி அட்டவணையிலும் மாற்றங்களை பரிசீலித்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், அமெரிக்காவில் பரவும் தவறான தகவல்கள் கனடாவுக்கு பெரும் கவலையாக இருப்பதாக அமைச்சர் மிஷேல் கூறியுள்ளார்.

அதனால், ஒரே கருத்துடைய பிற நாடுகளுடன் கனடா இணைந்து செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 50 ஆண்டுகளுக்குப..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கனடாவில் கடந்த சில வாரங்களாக வெப்பநிலை -20°C முதல் -40°C வரை நீடித்து வருகிறது.

பிரேபர்ன் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை -55.7°C வெப்பநிலை பதிவானது. இது 1975 ஆம் ஆண்டிற்குப் பிறகு அங்கு பதிவான மிகக்குறைந்த டிசம்பர் கால வெப்பநிலையாகும்.

மாயோ மற்றும் டாவ்ஸன் பகுதிகளில் தொடர்ந்து 16 இரவுகள் வெப்பநிலை -40°C-க்கு கீழேயே இருந்தது.

இந்த கடும் குளிர் தெற்குப் பகுதிகளுக்கும் பரவியுள்ளது.

கிறிஸ்துமஸ் மற்றும் அதைத் தொடர்ந்த நாட்களில் எட்மன்டன், மாண்ட்ரியல் மற்றும் ஒட்டாவா போன்ற நகரங்களில் வெப்பநிலை -20°C முதல் -28°C வரை சரிந்தது.

வரலாறு காணாத எரிசக்தி தேவையால் யூகோன் பகுதியில் மின்சாரத் தடை ஏற்படக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

துருவச் சுழல் கனடாவின் மீது நிலை கொண்டுள்ளதால், ஆர்க்டிக் பகுதியின் கடும் குளிர் காற்று தெற்கு நோக்கிப் பாய்ந்து வருகிறது.

கனடா குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கும் வேளையில், அமெரிக்காவின் பல மாநிலங்களில் இதுவரை இல்லாத அளவிற்கு வெப்பமான கிறிஸ்துமஸ் தினம் பதிவாகியுள்ளது.

ஓக்லஹோமா சிட்டியில் 25°C வெப்பம் பதிவாகி 1982 ஆம் ஆண்டின் சாதனையை முறியடித்தது. டெக்சாஸின் ஆஸ்டின் மற்றும் டல்லாஸ், மற்றும் வட கரோலினாவின் சார்லட் ஆகிய நகரங்களிலும் வெப்பநிலை 25°C-ஐத் தாண்டியது.

இது டிசம்பர் மாதக் குளிருக்கு மாறாக, ஏப்ரல் அல்லது மே மாத வசந்த காலத்தைப் போன்ற உணர்வைத் தந்தது.

சராசரி வெப்பநிலையை விட இது 15°C முதல் 30°C வரை அதிகமாகும்.

தென்மேற்குப் பாலைவனப் பகுதியிலிருந்து உருவான ஒரு வலிமையான உயர் அழுத்த மண்டலம் வெப்பக் காற்றைச் சிறைபிடித்து வைத்திருப்பதால் இந்த வெப்பம் நிலவுகிறது.

அடுத்த வாரத்தில், கனடாவில் நிலை கொண்டுள்ள குளிர் காற்று மெல்ல வடக்கு நோக்கி நகரத் தொடங்கும்.

இதனால் பசிபிக் பெருங்கடலில் இருந்து வீசும் மிதமான காற்று அமெரிக்கா மற்றும் தெற்கு கனடா பகுதிகளுக்குள் நுழையும் என வானிலை ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.






# கனடாவில் உயிரிழந்த இந்திய குடும்பஸ்தர்: பிரபல கோடீஸ்வரர் எலான் மஸ்க் விமர்சனம்

கனடாவில் மருத்துவமனை ஒன்றின் அலட்சியத்தால் இந்திய வம்சாவளியினர் ஒருவர் உயிரிழந்த விடயம் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

பிரபல கோடீஸ்வரரான எலான் மஸ்க் அந்த விடயம் தொடர்பில் விமர்சனம் ஒன்றை முன்வைத்துள்ளார்!

மூன்று குழந்தைகளின் தந்தையும் இந்திய வம்சாவளியினருமான ப்ரஷாந்த் ஸ்ரீகுமார் என்பவருக்கு, அலுவலகத்தில் பணி செய்துகொண்டிருக்கும்போது, இம் மாதம் 22 ஆம் திகதி, கடுமையான நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது.

உடனடியாக அவர் எட்மண்டனிலுள்ள Grey Nuns Hospital என்னும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவர் கடுமையான நெஞ்சு வலி வந்து துடித்த நிலையிலும், 8 மணி நேரமாக மருத்துவமனையின் நோயாளிகள் காத்திருக்கும் அறையில் அமர வைக்கப்பட்டுள்ளார்.

கடைசியாக மருத்துவர்கள் வந்து அவரை பரிசோதிக்க அழைத்துச் சென்ற சில விநாடிகளில் நெஞ்சைப் பிடித்தபடி சாய்ந்த ப்ரஷாந்த் உயிரிழந்து விட்டார்.

ப்ரஷாந்த் மரணம் குறித்து பிரபல கோடீஸ்வரரான எலான் மஸ்க் சமூக ஊடகமான எக்ஸில் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

8 மணி நேரம் நெஞ்சு வலியால் துடிதுடித்து உயிரிழந்த நபரின் மனைவி, அநாகரீகமாக நடந்துகொண்டதாக அவரிடம் கூறப்பட்டதாக எக்ஸில் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

அந்த இடுகைக்கு பதிலளித்துள்ள எலான் மஸ்க், அரசு, மருத்துவ சேவையில் ஈடுபடும்போது, அது DMV போலத்தான் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

DMV என்பது, அமெரிக்காவின் மோட்டார் வாகனத் துறையைக் (Department of Motor Vehicles) குறிக்கும். அதாவது, அமெரிக்க மோட்டார் வாகனத் துறை, மிகவும் தாமதமாக செயல்படுவதாக மோசமான பெயர் பெற்றுள்ள துறை ஆகும்.

ஆக, அமெரிக்காவின் மோட்டார் வாகனத் துறையைப்போலவே, மருத்துவ சேவையும் தாமதமாக செயல்படுவதாக அமெரிக்க மருத்துவ சேவையை எலான் மஸ்க் விமர்சித்துள்ளார்.




# 19 சட்டவிரோத குடியேற்றவாசிகளை கைது செய்துள்ளனர் கனடா அதிகாரிகள்

கனடாவில் சுமார் 19 சட்டவிரோத குடியேற்றவாசிகளை அந்நாட்டு அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கியுபெக் மாகாணத்தின் மொன்டெரெஜி பகுதியில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹெய்ட்டியைச் சேர்ந்த நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த குழு, அமெரிக்காவிலிருந்து கனடாவுக்கு சட்டவிரோதமாக கடக்க முயன்றதாக சந்தேகிக்கப்படுகின்றது.

கைதாகியவர்கள், அகதி கோரிக்கை முன்வைத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.